1992 செப்டம்பர் 21]

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கந்தர்வகோட்டைப் பகுதியைப் பொறுத்த வரையில் 80 ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்டது. தஞ்சாவூருக்கும் புதுக்கோட்டைக்கும் இடையிலே இருக்கிற அந்தப் பகுதி மக்கள், திருமணம் செய்ய வேண்டுமென்று சொன்னால், அவர்கள் தஞ்சாவூருக்குச் செல்ல வேண்டியிருக்கிறது; அல்லது புதுக்கோட்டைக்குச் செல்ல வேண்டி இருக்கிறது. திருமண மண்டபங்கள் கட்டுகிற திட்டம் சமூக நலத் துறையின் மூலம் இல்லையென்று சொன்னாலும், சமூக நலக் கூடமாவது கந்தர்வகோட்டையில் அமைத்து, திருமணங்களை நடத்துவதற்கு அந்தப் பகுதி மக்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்க முடியுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் இத்தகைய திருமண மண்டபங்கள் ஆங்காங்கே கட்டப்படுகின்றன. எனவே, அப்பகுதி மக்கள் இத்தகைய ஒரு திருமண மண்டபம் தேவை என்று சொல்லி, விண்ணப்பித்து, அதற்காக ஓரளவு நிதியை வசூலித்தால், மீதியை இந்து சமய அறநிலையத் துறை செலவழித்து திருமண மண்டபத்தைக் கட்டிக் கொடுக்க ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 16, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

16—

இராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடை நோய் புலனாய்வு பிரிவு.

*9116—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்; ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் 11 இடங்களில் கால்நடை புலனாய்வுப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. நிதிநிலை காரணமாக தற்பொழுது இராமநாதபுரத்தில் மேற்படி பிரிவு ஒன்று துவங்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு அடுத்தபடியாக கிராம மக்களுக்கு வருவாயைத் தேடித்தருவது பசு, எருமை, ஆடு போன்ற கால்நடைகளாகும். இராமநாதபுரம் மாவட்டத்தில் 7 இலட்சத்திற்கும் அதிகமான கால்நடைகளும் 4 இலட்சத்திற்கும் அதிகமான கோழிகளும் இருக்கின்றன. கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு இல்லாததால், பல கால்நடைகள் நோய்வாய்ப் பட்ட நிலையில் அடிமாடுகளாக அண்டை மாநிலங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு விற்கப்படுகின்றன. ஆறறிவு கொண்ட மக்களுக்கு மட்டுமின்றி ஐந்தறிவு கொண்ட கால்நடைகளையும் பாதுகாப்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு, அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவை ஏற்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி அளிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், எங்கள் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் நிதிநிலைக்கு ஏற்ப எதிர்வரும் ஆண்டுகளில் இது பரிசீலிக்கப் படும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டில் 11 இடங்களில் கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு இருப்பதாகக் கூறினார்கள். பிற்பட்ட மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, பிற்பட்ட மாவட்டமாகிய இராமநாதபுரம் மாவட்டத்தில் புலனாய்வுப் பிரிவை அடுத்த ஆண்டிலாவது ஆரம்பிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி அளிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்வரும் ஆண்டுகளில் இது பரிசீலிக்கப் படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 17, திரு. வ. தமிழரசு, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.